**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 141/2022**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | அபிநயா | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 20.11.2025.

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ ஓ.டி.டெக்னீசியன் வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் எனது பிறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அதில் என் பெயர் உள்ளதா என்றால் இல்லை. என் பெயர், என் தாயார் பெயர் மற்றும் என் தந்தை பெயர் குறிப்பிட்ட பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 11.03.1999-ல் பிறந்ததற்கு எந்த அரசு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

2. 1ஆம் பிரதிவாதி ரூபி மற்றும் சி.ஆர்.சரவணன் ஆகியோர்களுக்கு எந்த தேதியில் எந்த மாதத்தில் எந்த ஆண்டு யார் முன்னிலையில் எந்த மத சடங்கு அடிப்படையில் திருமணம் நடந்தது என நிரூபிக்க திருமண அழைப்பிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30.09.2022 வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டதில் இருந்து இதுநாள் வரை வழக்கில் சொல்லியுள்ள பூங்கொடி என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர் விவாகரத்து பெற்று சென்றுவிட்டார்.

3. இன்று வரை பூங்கொடி என்பவர் உயிரோடு உள்ளாரா என விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பூங்கொடிக்கும், சி.ஆர்.சரவணனுக்கும் நடந்த திருமணத்தை நிறுத்தக்கோரி காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், எங்களுக்கு தெரியாமல் கட்டாயப்படுத்தி திருமணம் செய்துவிட்டார்கள். பூங்கொடி மற்றும் சி.ஆர்.சரவணனுக்கு நடந்த விவாகரத்து வழக்கில் நானும் ரூபி என்பவரும் அவசிய தரப்பினராக சேர்ந்து வழக்கை நடத்தினோமா என்றால் இல்லை. சாட்சி தற்போது வழக்கு நடந்ததே தெரியாது என சொல்கிறார்.

4. பூங்கொடி மற்றும் சி.ஆர்.சரவணனுக்கு விவாகரத்து கொடுத்து தீர்ப்பானதை எதிர்த்து தீர்ப்பாணை செல்லாது எனக்கோரி மனு எதாவது செய்தோமா என்றால் இல்லை. விவாகரத்து கொடுத்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி மனு செய்ய தற்போது தயாராக உள்ளேனா என்றால் இல்லை. சி.ஆர்.சரவணன் இறந்தபிறகு காரியத்திற்கு கொடுத்த நோட்டிஸை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறந்ததே எனக்கு தெரியாது தெரியாமல் அனைத்தையும் செய்துவிட்டார்கள்.

5. சி.ஆர்.சரவணன் இறந்தபிறகு 1ஆம் வாதி ரூபிக்கு நடப்பு செய்தோமா என்றால் எங்களுக்கு இறந்ததே தெரியாது. வா.சா.ஆ.6 சி.ஆர்.சரவணனின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அதில் மனைவி பெயர் என்ன என்று போட்டுள்ளார்கள் என்றால் பூங்கொடி என தவறாக விவாகரத்து ஆனவரது பெயரை போட்டுள்ளார்கள். அந்த இறப்பு சான்றிதழ் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என நீதிமன்றத்தில் மனு ஏதாவது போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். அந்த மனு எண் மற்றும் தரப்பினர் யார்யார் என சொல்லமுடியுமா என்றால் சரியாக தெரியவில்லை.

6. நான் சொல்வதுபோல் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வா.சா.ஆ.6 தற்போது வரை நடைமுறையில் உள்ளது என்றால் சரியல்ல. சி.ஆர்.சரவணன் இறந்தபிறகு 1ஆம் பிரதிவாதி ராமதாஸ் மட்டும் தான் அவருக்கு வாரிசு என்றால் சரியல்ல, நானும் எனது அம்மாவும் தான் வாரிசு. நாங்கள் பணம் பறிக்க வேண்டி 1ஆம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல நான் தான் உண்மையான வாரிசு என வழக்கு போட்டுள்ளோம்.

7. பணம் பறிக்க வேண்டிய நோக்கத்தோடு சி.ஆர்.சரவணன் உயிரோடு இருந்தபோதே அவர் மீதும் 1ஆம் பிரதிவாதி மீதும் அவரது குடும்பத்தார் மீதும் நாங்கள் புகார் கொடுத்து குற்ற எண்.827/2013, 23.08.2013 அன்று பதிவு செய்யப்பட்டது என்றால் வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தியதால் அந்த புகாரை கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக இல்லை என்றால் அதில் போடவில்லை.

8. அந்த முதல் தகவல் அறிக்கையானது என்ன ஆனது என்றால் எங்களிடம் பணம் இல்லாததால் அந்த வழக்கை நடத்த முடியவில்லை அதனால் அந்த முதல் தகவல் அறிக்கை சென்னை உயர்நீதிமன்றத்தில் ரத்து செய்யப்பட்டதாக ஆன்லைனில் தெரிந்துகொண்டேன். எனது அம்மா கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவரா, நான் கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவரா என்றால் எனது அம்மா கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர், எனது அப்பா நாயுடு மதத்தை சார்ந்தவர் அதனால் நான் நாயுடு மதத்தவர்.

9. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை தான் நாங்கள் கொடுத்த புகாருக்கு கொடுத்தது என்றால் சரிதான் அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் உயர்நீதிமன்ற உத்தரவு தான் முதல் தகவல் அறிக்கை ரத்து செய்ததற்கானது என்றால் சரிதான், அது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உயர்நீதிமன்றம் முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ததற்கு எதிராக மேல்முறையீடு செய்தோமா என்றால் இல்லை.

10. இறந்த சி.ஆர்.சரவணனுக்கும் 1ஆம் வாதி ரூபி மற்றும் எனக்கும் எந்த உறவுமுறையும், சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல அவர் எனது அப்பா. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாவிற்கு நானும் எனது அம்மாவும் தான் உண்மையான வாரிசுகள் என கேட்டு வழக்கு போட்டுள்ளோம். இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாத்தா ராமதாஸ் மற்றும் தாசில்தாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன்.

11. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும் சி.ஆர்.சரவணனின் வாரிசு சான்று கேட்டு பிரதிவாதியின் 2 மற்றும் 3–க்கு எதிராக பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் தெரியும் நாங்கள் தான் விவரம் சொன்னோம். 2ஆம் பிரதிவாதி கொடுக்கும் வாரிசு சான்று கேஸ் கனெக்சன் மாற்றுவதற்கும், மின்இணைப்பு மாற்றுவதற்கும் மற்றும் வங்கியில் இறந்துபோனவர் விட்டுச்சென்ற பணத்தை பெற மட்டுமே செல்லுபடியாகும் என்றால் எனது அப்பாவிற்கு நியாயமாக எது சேர வேண்டுமோ அது எனக்கு கிடைக்க வேண்டும்.

12. இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் வாரிசு சான்று கேட்டு வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. தாவாவில் 16.07.2022 அன்று சி.ஆர்.சரவணன் இறந்துவிட்டதாகவும் அவரது சொத்துக்கு வாதிகள் தான் வாரிசுகள் என சொல்லியுள்ள நிலையில் அவரது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் என்னவென்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்களும் சி.ஆர்.சரவணனுக்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் சி.ஆர்.சரவணனுக்கு வாரிசு இறந்துவிட்ட ரூபி மற்றும் நான் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல.

13. அரசிதழ் எண்.478–ன் படி 2ஆம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கேட்டு மனு தாக்கல் செய்து ரத்து செய்தபிறகு மேல்முறையீடு செய்துவிட்டு அதன்பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றாலும் 1ஆம் பிரதிவாதியை வெறுப்பேற்ற வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, இரண்டு மனைவி என்பதால் வழக்கு போட சொன்னார்கள். இரண்டு மனைவிகளுக்காக இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், விவாகரத்தான மனைவி பெயர் இறப்பு சான்றிதழில் இருப்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்ய சொன்னார்கள்.

**2 மற்றும் 3வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சி.ஆர்.சரவணன் வாரிசு சான்று கேட்டு யார் மனு செய்தது என்றால் நான்தான். அந்த மனு இறந்துபோன சி.ஆர்.சரவணனுக்கு இரண்டு மனைவிகள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். சரவணனின் அம்மா பெயர் சந்திரபிரபா. அவர் 2014–ல் இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் அப்பா பெயர் சி.ஆர்.சரவணன் என்றும் இனம் ஆதி திராவிடர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழை யார் மனு கொடுத்து வாங்கியது என்று தெரியுமா என்றால் எனது தாத்தா ராமதாஸ். அதில் உள்ள விவரங்களை அவர் தான் கொடுத்தார் என்றாலும் நாங்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. வட்டாட்சியரிடம் வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்தபோது உரிய ஆவணங்கள், உரிய விவரங்கள் தாக்கல் செய்யாததால் மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, எங்களிடம் இருந்த உரிய ஆவணங்களை தாக்கல் செய்தோம். தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.